தினமணி

# சம்பா பருவத்தில் நேரடி புழுதி நெல் விதைப்பு

ஜி.சுந்தரராஜன்

First Published : 02 Aug 2012 12:20:29 AM IST



நேரடி புழுதி நெல் விதைப்பு பணி.

சிதம்பரம்: மாறிவரும் கிராம சமூக பொருளாதார காரணிகளால் வேளாண்மைக்கு பணியாளர்கள் கிடைப்பது ஒரு பிரச்னையாக மாறி வருகிறது. இதை சமாளிக்க தமிழக அரசு வேளாண்மையில் இயந்திர மயமாக்கலை ஊக்குவித்து வருகிறது. மேலும் டெல்டா மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழை குறைந்து குறுவை சாகுபடி குறைந்துள்ளது. மேட்டூர் அணையில் போதுமான நீர் இல்லாமையால் எதிர்வரும் சம்பா பருவமும் நிச்சயமற்ற சூழல் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

இந்நிலையில் சம்பா பருவத்தில் நேரடி புழுதி விதைப்பு செய்தால் வெற்றிகரமான சாகுபடி செய்யமுடியும் என்கிறார் கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ். நேரடி புழுதி விதைப்பு குறித்து அவர் தெரிவித்தது:

சம்பா பருவத்துக்கு நாற்று விடும் பருவமான ஆகஸ்ட் மாத இறுதியில் அல்லது செப்டம்பர் மாத முதல் வாரத்தில் பாசனத்துக்கு மேட்டூர் நீர் கிடைக்காது என்ற சூழ்நிலை ஏற்பட்டால் புழுதி நேரடி விதைப்பு முறை ஒரு சிறந்த தீர்வாகும். இம்முறை கடந்த 2004-ல் இதேபோன்ற நிச்சயமற்ற காலநிலையில் (ரங்ஹற்ட்ங்ழ் இர்ய்க்ண்ற்ண்ர்ய்) வேளாண் துறையால் இம்முறை பரிந்துரைக்கப்பட்டு விவசாயிகளால் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்ட ஒன்றாகும்.

புழுதி விதைப்பு செய்வது எப்படி? அவ்வப்போது கிடைக்கும் மழைக்கேற்ப நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை புழுதி உழவு செய்துகொள்ள வேண்டும். செப்டம்பர் 5 லிருந்து 15 தேதிக்குள் விதைப்பு செய்து படல் இழுத்து விதைகளை மூட வேண்டும். இதை டிராக்டரைக் கொண்டு செய்ய முடியும். இவ்வாறு புழுதி விதைப்பு செய்யப்பட்ட விதைகள் மழை மூலமோ, பாசனம் செய்தோ போதுமான ஈரப்பதம் கிடைக்கும்போதோ முளைத்து வரும். வாரக்கடைசியில் மழை இல்லாவிட்டாலும் விதைகள் பாதிக்கப்படுவதில்லை. சில சமயம் மழை போதுமானதாக அமையாவிடில் வயலில் மேலாக உள்ள விதைகள் மட்டும் முளைத்துவரும். அடுத்து வரும் மழைக் காலங்களில் மீத விதைகள் முளைக்கும். இதனால் ஏற்படும் நாற்றின் வயது வேறுபாட்டை உர மேலாண்மை மூலம் சரிபடுத்திக் கொள்ள முடியும்.

விதை அளவு: சம்பா பருவத்துக்கு நாற்றங்காலுக்கு பரிந்துரைக்கப்படும் அளவான ஏக்கருக்கு 16 கிலோவை போல இருமடங்கு அளவு விதையளவு நேரடி புழுதி விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும். அதாவது ஒரு ஏக்கருக்கு 30 லிருந்து 35 கிலோ வரை விதைகளை, விதைப்பு செய்யலாம். நேரடி புழுதி விதைப்புக்கு விதை டிரம் (நங்ங்க் ஈழ்ன்ம்) அல்லது விதைக் கருவி (நங்ங்க் ஈழ்ண்ப்) கொண்டு விதைப்பு மேற்கொள்ளலாம். இவ்வாறு செய்யும்போது ஏக்கருக்கு 12 அல்லது 15 கிலோ விதையே போதுமானதாக இருக்கும். இம்முறையை கடைபிடித்தால் வேளாண்மைத்துறை வழங்கிவரும் திருத்திய நெல் சாகுபடிக்கான மானிய உதவிகளை பெற முடியும்.

நேரடி விதைப்புக்கு ஏற்ற ரகங்கள் மற்றும் வயது விவரம்: காவித்திரி (இத-1009)- வயது 160 நாள், மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி - 140 நாள், அஈப-38- 135 நாள், இஞ-43 - 135 நாள், இஞ(த)-48, இஞ (த)-50 , ஆஆப-5204 - 135 நாள். செப்டம்பர் 15 தேதியிலிருந்து 30 வரை விதைப்பு செய்யும்போது அஈப-39 (125 நாள் பயிர்) ரகத்தை விதைப்பு செய்யலாம்.

களை நிர்வாகம்: நேரடி புழுதி விதைப்பின் பிரச்னையாக கருதுவது களை எடுக்கும் பணி. இதற்கு விவசாயிகள் ரசாயன களைக்கொல்லிகளைப் பயன்படுத்தி தீர்வு காணலாம். பயிர் முளைத்து 15 நாட்களிலிருந்து 25 நாட்களுக்குள் வயலில் எம்மாதிரியான களைகள் முளைத்துள்ளன என்பதற்கேற்ப களைக் கொல்லிகளை தேர்வு செய்து களைகளை கட்டுப்படுத்தலாம். வயலில் கோரைகள் மட்டும் இருப்பின் 2,4 ஈ கலைக்கொல்லியை ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். வயலில் புல் வகை களைகள் மட்டும் இருப்பின் ஃபெளோக்சா புரோப்பாரிதல் 9.3 சதவீத நஇ களைக் கொல்லியை ஒரு லிட்டர் நீருக்கு 2.5 மி.லி என்ற அளவில் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். வயலில் கோரைகள், புற்கள் என இரண்டு விதமான களைகளும் இருப்பின் பிஸ்பைரிபேக் சோடியம் 10 சதவீதம் நஇ களைக் கொல்லியை ஒரு லிட்டர் நீருக்கு 1 மி.லி என்ற அளவில் சேர்த்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம். இந்த களைக்கொல்லியைப் பயன்படுத்துகையில் வயலில் நீர் தேங்கி நிற்கக்கூடாது.

உர நிர்வாகம்: பயிர் முளைத்தலிலிருந்து 30-ம் நாள் வயலில் நீர் நிறுத்தி அடியுரம் இட வேண்டும். அடியுரம் இட்டதிலிருந்து 20 நாட்கள் இடைவெளியில் மேலுரம் இட வேண்டும்.


பயிர் எண்ணிக்கை பராமரித்தல்: நேரடி விதைப்பில் பயிர் எண்ணிக்கை சரியான முறையில் பராமரிக்க முடியும். நடவு செய்யும்போது ஆட்கள் பற்றாக்குறையால் பயிர் எண்ணிக்கை சரியாக பராமரிக்க முடிவதில்லை. நேரடி விதைப்பில் பயிர் எண்ணிக்கை ஒரு சதுரமீட்டருக்கு 60-ஐ விட அதிகமாக இருப்பின் களைத்து விட வேண்டும். பயிர் எண்ணிக்கை மிக குறைந்துவிட்டால் திருத்திய நெல் சாகுபடி செய்வது போன்று மேட்டுப்பாத்தி நாற்றாங்கால் விட்டு 12 முதல் 16 நாள் வயதுடைய நாற்றுகளை விட்டு பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும்.

நேரடி புழுதி விதைப்பின் நன்மைகள்: இதன் மூலம் சாகுபடி செலவு குறைவு. நாற்றங்கால் தயாரித்தல், நாற்று பறித்தல், நடவு செய்தல் ஆகிய பணிகள் இல்லாமையால் ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வரை சாகுபடி செலவு மிச்சமாகிறது. நெற்பயிரின் வயது 10 நாட்கள் வரை குறைகிறது. பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுவதால் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. எனவே டெல்டா மாவட்ட விவசாயிகள் நீர் நிச்சயமற்ற காலநிலையில் நம்பிக்கை இழக்காமல் வரும் சம்பா பருவத்தில் நேரடி புழுதி விதைப்பின் மூலம் சாதனை படைக்கலாம் என்கிறார் வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ்.

## பயறு வகை பயிர்களைத் தாக்கும் பூச்சிகளும் கட்டுப்படுத்தும் வழிகளும்

ஆர்.ஜெயபிரகாஷ்

First Published : 02 Aug 2012 12:19:41 AM IST



பயறுவகை பயிர்களைக் தாக்கும் பூச்சிகளும், அதை கட்டடப்படுத்தும் என்.பி வைரஸும்.

புதுச்சேரி: விவசாயிகள் பயிரிடும் பயறு வகை பயிர்களை பல்வேறு வகையான பூச்சிகள் தாக்குகின்றன. குறிப்பிட்ட சில வைரஸ்களை கொண்டு தயாரிக்கப்படும் உயிர்ரக மருந்துகளைக் கொண்டு இவ் வகையான பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

புதுச்சேரி மாநில விவசாயிகள் நிலக்கடலை, உளுந்து, பச்சைப்பயிறு, துவரை, சோயா பீன்ஸ், சூரியகாந்தி போன்றவற்றை பயிரிடுகின்றனர். இப் பயிர்களில் பச்சை புழு சேதத்தை உருவாக்கி மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது.

இந்த பச்சைப் புழுக்களை வைரஸ் உயிரிகளைப் பயன்படுத்தி அழிக்கலாம். இப் பூச்சிகளை அழிக்க என்.பி.வைரஸ் என்ற உயர்ரக பூச்சிக்கொல்லி பயன்படுத்தப்படுகிறது.

இப் பூச்சிக் கொல்லி குறித்தும் இதைப் பயன்படுத்தும் முறை குறித்தும் புதுச்சேரி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பூச்சியியல் வல்லுநர் நி.விஜயகுமாரிடம் கூறியது:

பச்சைப் புழு: கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பயிர்கள் மற்றும் இயற்கையாக வளரும் தாவர இனங்களைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்ட இந்த பச்சைப் புழு பல பயிர் உண்ணும் பூச்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுவாக பச்சைப் புழுக்கள் தமது ஒரு மாத கால வாழ்க்கை சுழற்சியில் 30-45 நாள்கள் வயதுடைய பயிர்களைத் தாக்கி சேதப்படுத்துகின்றனர். சேதப்படுத்தப்படும் பயிர்களில் பச்சைப் புழுக்களின் அந்துப்பூச்சிகள் (தாய்ப் பூச்சிகள்) நடமாட்டம் பரவலாக இருக்கும்.

இந்த அந்துப் பூச்சிகள் இலைகளின் மீது முட்டைகள் இடுகின்றன. மூன்று அல்லது நான்கு நாள்களில் முட்டையிலிருந்து வெளிவரும் இளம் புழுக்கள் பயிர்களின் மொட்டு, காய், விதை, மற்றும் மலர் ஆகிய பாகங்களில் தலையை உட்செலுத்தி எஞ்சிய பாகங்களை வெளியே வைத்து தாக்குலை ஏற்படுத்துகின்றன. இளம் புழுவானது ஒரு நாளைக்கு 30-40 பயிர் பாகங்களை அழிக்கும் தன்மை உள்ளது. பச்சைப் புழுவானது சில சமயங்களில் பழுப்பு கலந்த பச்சை நிறத்திலும் 35 மி.மீ. நீளமுடையதாகவும் இருக்கும்.

இது தனது புழுப் பருவத்தை 18-25 நாள்களில் நான்கு நிலைகளை கடந்து முடிக்கிறது. பருமனான அந்துப் பூச்சியானது மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் இருப்பதோடு அதன் முன் இறக்கையில் சாம்பல் நிற அலை போன்ற கோடுகளுடன் நடுவில் சிறுநீரக விதை போன்ற கருப்பு புள்ளி இருக்கும்.

என்.பி.வைரஸ் உயிரி: என்.பி.வைரஸ் உயர்ரக பூச்சிக் கொல்லிகள், கண்ணுக்குப் புலப்படாத வைரஸ் நுண்கிருமிகளால் ஆன நன்மை செய்யும் உயிரினக் கட்டுப்பாடு காரணியாகும், வைரியான் என்ற உட்கருவைக் கொண்ட இந்த வைரஸ் கிருமிகள் முறையற்ற வடிவமைப்பில் அறுகோண செல்களால் ஆனது.

இவ் வைரஸ் கிருமிகள் பச்சைப் புழுக்களை மட்டுமே கொல்லக் கூடிய ஆற்றல் பெற்றவை. என்.பி.வைரஸ் உயர்ரக பூச்சிக்கொல்லி மருந்தைப் பயிர்களில் தெளித்தவுடன் புழுக்கள் பயிர்களின் பாகங்களை உண்ணும் போது வைரஸ் கிருமிகள் புழுக்களின் வயிறு, குடல் பகுதிகளுக்கு செல்கின்றன. அங்கு அவை அதிகமாக உற்பத்தியாகி இரத்தத்தில் கலக்கிறது. வைரஸ் தெளித்த 5-7 நாள்களில், வைரஸ் துகள்கள் புழுக்களின் அடிபாகத்தில் நோயை உண்டாக்கும்.

பின்னர் புழுக்கள் பயிர்களில் தலைகீழாக தொங்கி இறந்துவிடும். வைரஸ் கிருமிகளால் தாக்கப்பட்ட புழுவின் அடிப்பாகத்தில் ஊதாநிற வண்ணம் காணப்படும். இந்த என்.பி.வைரஸ் எனும் புதிய உயிரினக் கட்டுப்பாடு காரணி புதுச்சேரி குரும்பாப்பட்டில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசர் வேளாண் அறிவியல் திரவ வடிவில் பிளாஸ்டிக் குடுவைகளில் 100 மிலி மற்றும் 250 மிலி அளவில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

உபயோகிக்கும் முறை:என்.பி.வைரஸ் கரைசலை ஒரு ஏக்கருக்கு 250 மிலி என்ற அளவில் எடுத்துக் கொண்டு அதனுடன் 5 சதவீத வெல்லச் சர்க்கரை, 5 சதவீத கிரானைட் பாலிஷ் கழிவு, ஒட்டுத் திரவமான டீபால் (அல்லது) ரானிபால் 100 மிலி, ராபின் நீலம் 100 மிலி மற்றும் போரிக் அமிலம் (அல்லது) டானிக் அமிலம் 25 மிலி சேர்த்து இளம் புழுக்களின் தாக்குதல் தோன்றியவுடன் இலைகள், தண்டுகள், காய்கள், கதிர்கள் முழுவதும் நனையும்படி மாலை வேளையில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

இதை மாலைப் பொழுதில் மட்டுமே தெளிக்க வேண்டும். பயிர்களின் அனைத்து பாகங்களிலும் படுமாறு தெளிக்க வேண்டும். நல்லத் தண்ணீரை தெளிப்பதற்கு பயன்படுத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் உப்பு நீர், கலங்கல் நீர், நுரைப்பு நீர் ஆகியவற்றை தெளிப்பதற்கு பயன்படுத்தக் கூடாது. இளம் புழுக்கள் தோன்றியவுடன் தெளிக்க வேண்டும். வைரஸ் கரைசலை எக்காரணம் கொண்டும் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளுடனும், வேப்ப எண்ணெய்யுடனும் கலக்கக்கூடாது.

வைரஸ் கரைசலைப் பயிர்களின் மீது தெளித்தவுடன் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளின் உபயோகத்தை 10 நாள்களுக்கு தவிர்க்க வேண்டும்.

இந்த வைரஸ் உயிர் ரக மருந்தை பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். செலவும் குறைவாகும். இதனால் விவசாயிகள் கூடுதல் லாபம் பெற முடியும்.

மேலும் இந்தப் பூச்சிகள் பயறு வகைகள் மட்டுமின்றி தக்காளி, வெண்டை, பச்சைமிளகாய், பூசணி, கனகாம்பரம் மற்றும் கேந்தி போன்றவற்றிலும் தாக்கும். அதற்கும் இந்த என்.பி. வைரஸ் உயர்ரக மருந்து கரைசலை உபயோக்கிகலாம் என்றார்.

## கால்வாய் பாசனத்துக்கும் மேட்டூர் திறப்பு இல்லை

க.தங்கராஜா

First Published : 01 Aug 2012 11:04:43 AM IST

சேலம், ஜூலை 31: மேட்டூர் அணையில் இருந்து, காவிரி டெல்டா பாசனத்தைத் தொடர்ந்து கிழக்கு, மேற்குக் கரை கால்வாய்களிலும் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

இதனால், மூன்று மாவட்டங்களில் உள்ள சுமார் 45,000 ஏக்கர் நிலங்களில் வேளாண் உற்பத்தி பாதிக்கப்படும் நிலை உருவாகி உள்ளது.
தமிழகத்தின் 11 டெல்டா மாவட்டங்களில் 16 லட்சம் ஏக்கர் விவசாய நிலத்துக்கு தண்ணீர் வழங்கும் மேட்டூர் அணை, ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி திறக்கப்பட்டு, ஜனவரி 28-ம் தேதி மூடப்படும்.
அணையின் 78 ஆண்டு கால வரலாற்றில் கடந்த ஆண்டில் முன் கூட்டியே பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில், நிகழாண்டில் ஆகஸ்ட் மாதம் தொடங்கி விட்ட நிலையிலும் அணை திறப்புக்கான சாத்தியக் கூறுகள் இல்லாத நிலையே உள்ளது.
கவலை அளிக்கும் வகையில் நீர்வரத்து: காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் போதிய மழை இல்லாததால், மேட்டூர் அணைக்கு கடந்த சில மாதங்களாகவே நீர்வரத்து வினாடிக்கு 500 கன அடிக்கும் குறைவாக உள்ளது.
அணை திறக்கப்படாத நிலையிலும் பவானி, திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளின் குடிநீர் தேவைக்காக கடந்த 8-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை சுமார் 400 கன அடி வீதம் கிழக்கு, மேற்கு கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது.
தென்மேற்குப் பருவ மழையை நம்பி இனி பலனில்லை என்ற நிலையில், வட கிழக்குப் பருவ மழைக்காக வரும் அக்டோபர் மாதம் வரையிலும் விவசாயிகள் காத்திருக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது. ஆனால், அதற்குள் நீர்மட்டம் 50 அடிக்கும் குறைந்து, அடுத்த ஆண்டின் வேளாண் உற்பத்தியையும் பாதிக்கும் அபாயம் உள்ளது.
டெல்டா விவசாயிகளின் நிலை இப்படி இருக்க, மேட்டூர் அணையை நம்பியுள்ள சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்ட கிழக்கு, மேற்கு கால்வாய் விவசாயிகளின் நிலையும் பரிதாபத்துக்குரியதாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. டெல்டாவுக்கு தண்ணீர் செல்லும் அதே நேரத்தில், ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1-ம் தேதி அணையின் கிழக்கு, மேற்கு கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்படும்.
கால்வாய் பாசனத்துக்கு 10 டி.எம்.சி. தேவை: வினாடிக்கு 1,000 கன அடி வீதம் ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் டிசம்பர் 15-ம் தேதி வரை 137 நாள்களுக்கு மொத்தம் 9.60 டி.எம்.சி. நீர் கால்வாயில் திறக்கப்படும். இதன் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் சுமார் 45,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். நிகழாண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கியுள்ள நிலையில், தண்ணீர் திறப்பு குறித்த அறிவிப்பு வெளியாகவில்லை.
அடுத்த பருவ மழை வரும் வரையிலுமோ அல்லது கர்நாடகத்தில் இருந்து தண்ணீர் வரும் வரையிலுமோ மேட்டூரில் இருக்கும் 36 டி.எம்.சி.யில் இருந்துதான் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய முடியும்.
இந்த நிலையில், கால்வாய் பாசனத்துக்கு தேவைப்படும் 10 டி.எம்.சி. தண்ணீரை தமிழக அரசு திறக்க உத்தரவிடுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இதனால், டெல்டா விவசாயிகளுடன் சேர்த்து

சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்ட கால்வாய் பாசன விவசாயிகளின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

**50 டி.எம்.சி. தண்ணீரை வழங்குமா கர்நாடகம்?**

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புப்படி கர்நாடகம் ஆண்டுதோறும் ஜூன் 1-ம் தேதியில் இருந்து மே 31-ம் தேதி வரை 205 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்துக்கு வழங்க வேண்டும். இதன்படி ஜூன் 1-ம் தேதியில் இருந்து ஜூலை 31-ம் தேதி வரை 53 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்துக்கு கிடைத்திருக்க வேண்டும்.

ஆனால், செவ்வாய்க்கிழமை (ஜூலை 31) மாலை நிலவரப்படி 3.30 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே வந்துள்ளது. அதன்படி, இன்னும் 50 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் தமிழகத்துக்கு கொடுக்க வேண்டும். கடந்த 10 நாள்களாக கர்நாடகத்தில் பலத்த மழை பெய்து வருவதால், அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து நல்ல நிலையில் உள்ளது.

64 அடி மொத்த உயரம் கொண்ட கபினி அணையில் இப்போது 56 அடிக்கு தண்ணீர் உள்ளது. 129 அடி உயரம் கொண்ட ஹேரங்கியில் 123 அடிக்கும், 117 அடி உயரம் கொண்ட ஹேமாவதியில் 91 அடிக்கும் தண்ணீர் இருப்பு உள்ளது. கே.ஆர்.எஸ். அணையில் (கிருஷ்ணராஜ சாகர்) மட்டும் சற்றுக் குறைவாக அதாவது, 124 அடி உயரத்தில் 76 அடிக்கு தண்ணீர் இருப்பு உள்ளது. இதில் கே.ஆர்.எஸ்., ஹேமாவதி ஆகியவற்றில் தலா 4,000 கன அடி தண்ணீரும், கபினியில் 3,400, ஹேரங்கியில் 2,800 கன அடி வீதமும் தண்ணீர் வரத்து உள்ளது. கர்நாடக அரசு இந்தப் புள்ளி விவரத்தை தெரிவித்தாலும், உண்மையான நீர்வரத்து இதைக் காட்டிலும் கூடுதலாகவே இருப்பதாகக் கூறப்படுகிறது.

## மானிய விலையில் நெல் விதை வழங்கல்

First Published : 01 Aug 2012 01:12:27 PM IST

பொன்னமராவதி, ஜூலை 31:  மைலாப்பூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழா நிறைவு நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு மானியவிலையில் நெல்விதை மற்றும் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டன.

பொன்னமராவதி வட்டத்தில் இடையாத்தூரில் தொடங்கிய உழவர் பெருவிழா அனைத்து வருவாய் கிராமங்களிலும் நடத்தப்பட்டு மைலாப்பூரில் செவ்வாய்க்கிழமை நிறைவுற்றது.

ஒன்றியக்குழுத் தலைவர் சி. அழகுசுப்பையா, விதை கிராமத் திட்டத்தில் 50 % மானிய விலையில் 1,000 கிலோ நெல் விதைகள் மற்றும் வேளாண் கருவிகளை விவசாயிகளுக்கு வழங்கினார்.

பொன்னமராவதி வேளாண் உதவி அலுவலர் பெ. கந்தசாமி விவசாயிகளுக்கு திருந்திய நெல்சாகுபடி தொழில் நுட்பங்கள், விதைக்கிராமத் திட்டத்தின் நோக்கம் மற்றும் மானிய விவரங்களை கூறினார்.

வேளாண் அலுவலர் ரமேஷ் மண்மாதிரி எடுக்கும் முறையையும், வேளாண் பொறியியல் துறை மற்றும் தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனைத்துறை அலுவலர்கள் மானிய விபரங்கள், தொழில் நுட்பங்களையும் விளக்கினர்.
கலைக்குழுவினர் வேளாண் தொழில் நுட்பங்களை பாடலாகப் பாடி விளக்கினர்.
மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் விஎஸ். ஆவடித்தேவன், அட்மா திட்டத் தலைவர் காசி. கண்ணப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஈமு கோழி நிறுவனங்களுக்கு தடை விதிக்க காங்கயம் நகராட்சி மறுப்பு
First Published : 01 Aug 2012 12:10:23 PM IST

காங்கயம், ஜூலை 31: காங்கயம் பகுதியில் பெருகிவரும் ஈமு கோழி நிறுவனங்களுக்கு தடை விதிக்க காங்கயம் நகராட்சி மறுத்துவிட்டது.
காங்கயம் நகராட்சி கூட்டம் நகர்மன்றத் தலைவர் ஜி.மணிமாறன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு நகராட்சி ஆணையர் எம்.தமிழரசு முன்னிலை வகித்தார்.
கூட்டத்தில் 18-வது வார்டு உறுப்பினர் ஜி.வளர்மதி பேசியது: காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய இருசக்கர வாகன நிறுத்தம் மற்றும் கட்டணக் கழிவறைகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.
மக்கள் ஏமாறாமல் இருக்க கட்டண விபரம் குறித்து அறிவிப்புப் பலகை வைக்க வேண்டும். இதே போல, சந்தையிலும் விற்பனைக்கு கொண்டு வரும் பொருள்களுக்கு விதிக்கப்படும் கட்டண விவரம் குறித்த அறிவிப்புப் பலகைகளும் அமைக்கப்பட வேண்டும்.
நகராட்சித் தலைவர் ஜி.மணிமாறன்: நகராட்சிக்கு சொந்தமான் கழிவறை மற்றும் இருசக்கர வாகன நிறுத்தங்களில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார்கள் வந்தன.
இதுதொடர்பாக அந்தக் குத்தகைதாரர்களுக்கு நகராட்சி ஆணையர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். தொடர்ந்து அதிகக் கட்டணம் வசூலிக்கப்பட்டால், உரிமம் ரத்து செய்யப்படும் என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.
கவுன்சிலர் சிபகத்துல்லா (5-வது வார்டு): காங்கயம் நகராட்சிப் பகுதியில் புற்றீசல் போல முளைக்கும் ஈமு கோழி நிறுவனங்களை தடை செய்ய நகராட்சி சார்பில் நடவடிக்கை எடுக்கப்படுமா?
நகராட்சித் தலைவர்: ஆட்சியர், காவல்துறை மாவட்டக் கண்காணிப்பாளர் ஆகியோர் எச்சரிக்கை விடுத்தும் தொடர்ந்து பெருகிவரும் ஈமு கோழி நிறுவனங்களில் பொதுமக்கள் பணம் செலுத்துகின்றனர். அவர்களது சொந்தப் பொறுப்பில் பணம் செலுத்துவதால், நகராட்சி சார்பில் தடை எதுவும் விதிக்க இயலாது.

கவுன்சிலர் த.சத்யா தமிழரசு (17-வது வார்டு) : எனது வார்டில் குடிநீர்ப் பற்றாக்குறை கடுமையாக உள்ளது. கடந்த 20 நாள்களாக குடிநீர் வராமல் பொதுமக்கள் கடும் பாதிப்பில் உள்ளனர். குடிநீர் சீராகக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகராட்சித் தலைவர்: குடிநீர்ப் பிரச்னையைப் போக்க ஒவ்வொரு வார்டிலும் ஆழ்குழாய் கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ.அமானுல்லா (14-வது வார்டு): நகராட்சி சார்பில் நகரில் நடக்கும் கூட்டங்களில் வார்டு உறுப்பினர்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்படுவதில்லை. இந்தக் குறையைப் போக்க வேண்டும்.

நகராட்சித் தலைவர்: இனிமேல் நடைபெறும் கூட்டங்களில் வார்டு உறுப்பினர்களுக்கு மரியாதை அளிக்கப்படும். கூட்டங்களில் அவர்களுக்கும் பேச வாய்ப்பு அளிக்கப்படும்.

எம்.ராஜ் (7-வது வார்டு உறுப்பினர்): தாராபுரம் சாலையிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கு நகராட்சி சார்பில் குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும்.

நகராட்சித் தலைவர்: விதிகளின்படி, நகராட்சி செலவில் குடிநீர் வழங்க வழியில்லை. ஆனால், உரிய அதிகாரிகள் முறைப்படி கோரிக்கை வைத்தால், அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

## தேங்காய் விலை வீழ்ச்சி

கே. கான்முகம்மது

First Published : 02 Aug 2012 03:18:49 AM IST



பேராவூரணி: காவிரி நீரின்றி குறுவை சாகுபடி பொய்த்துள்ள நிலையில், தேங்காய் விலையும் தொடர்ந்து வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதால், காவிரி டெல்டா பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கவலையில் உள்ளனர். நாட்டில் கேரளத்துக்கு அடுத்தபடியாக, தேங்காய் அதிகமாக விளையும் மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக காவிரி

நதிநீர் பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ள டெல்டா விவசாயிகள், நெல் சாகுபடிக்கு ஆற்றுப் பாசனத்தை நம்ப முடியாத நிலையில், பெரும்பாலானோர் தென்னை விவசாயத்திற்கு மாறினர். இந்த நிலையில், தேங்காய் விலை வீழ்ச்சி உள்ளிட்ட பிரச்னைகளால் அவர்கள் தற்போது கவலை அடைந்துள்ளனர். கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தேங்காய் என்ன விலைக்கு விற்றதோ அதே விலையில்தான் தற்போதும் விற்கப்படுகிறது.

ஆனால், தென்னைக்கான இடுபொருட்கள், பாசனம் செய்வதற்கான செலவினங்கள், தொழிலாளர்கள் ஊதியம் உள்ளிட்டவை தற்போது பலமடங்கு உயர்ந்துள்ளது. இதற்கு மத்திய அரசின் தவறான இறக்குமதி கொள்கையே காரணம் என கூறப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து தேங்காயை எண்ணெய் பிழியாமல் புண்ணாக்கு என்ற பெயரில் பெரிய நிறுவனங்கள் இறக்குமதி செய்கின்றன. இதற்கு வரி கிடையாது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட புண்ணாக்குகளை இங்குள்ள ஆலைகளில் இட்டு எண்ணெயாகப் பிழிந்து குறைந்த விலைக்கு விற்கின்றனர். இதனால், இங்கு உற்பத்தியாகும் தேங்காய்க்கு விலை கிடைப்பதில்லை.

மத்திய, மாநில அரசுகள் தேங்காய் விலை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், ஆயிரக்கணக்கான டெல்டா விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்படுவர்.

இதுகுறித்து தென்னை விவசாயிகள் சங்கத் தலைவர் ஆ. பழனிவேல் கூறியது: தென்னை விவசாயிகளின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் மத்திய, மாநில அரசுகள் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கொப்பரை விலையை உயர்த்துவது, உரித்த தேங்காயை அரசு கொள்முதல் செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்க வேண்டும் என்றார் அவர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் பா. பாலசுந்தரம் கூறியது:மும்பை, சென்னை, கோவை, பொள்ளாச்சி போன்ற நகரங்களில் உள்ள பெரிய தேங்காய் வியாபாரிகள் நாடு முழுவதும் உள்ள சில்லறை வியாபாரிகள் மூலம் தேங்காயை கொள்முதல் செய்கின்றனர். இவற்றை ஓரிடத்தில் திரட்டி, வெளிநாட்டு இறக்குமதி, உள்நாட்டு தேங்காய்களின் இருப்பு ஆகியவற்றை கணக்கிட்டு, தாமாகவே விலையை நிர்ணயிக்கின்றனர்.

இதனால், விலையேற்றமும், கடுமையான விலை இறக்கமும் ஏற்படுகிறது. இவர்களை கட்டுக்குள் கொண்டுவர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேங்காய் புண்ணாக்கு இறக்குமதிக்கு தடைவிதிக்க வேண்டும் அல்லது அதற்கு கடுமையாக வரிவிதிக்க வேண்டும். தமிழக அரசு மற்ற பயிர்களுக்கு வழங்குவதுபோல ஊக்கத்தொகை வழங்க வேண்டும் என்றார். தற்போதைய சூழலில், ஒரு தேங்காய்க்கான உற்பத்தி செலவு ரூ. 8 அளவுக்கு வருகிறது. விற்பனை விலையோ 3 அல்லது 4 ரூபாயாக உள்ளது. எனவே, தென்னை சாகுபடியை காப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தலையங்கம் வயிற்றில் அடிக்காதீர்கள்!

First Published : 02 Aug 2012 01:46:25 AM IST
Last Updated : 02 Aug 2012 04:06:54 AM IST

நிகழாண்டு, ஜூலை 20-ம் தேதி வரை இந்தியா முழுவதிலும் 144.59 லட்சம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது வேறெந்த பயிர் சாகுபடியைக் காட்டிலும் அதிகம்.
மேலும் சென்ற ஆண்டு உற்பத்தியில் நுகர்வு மற்றும் ஏற்றுமதி போக, நடப்பாண்டுக்கு மிச்சமாக இருக்கும் அரிசி 33 மில்லியன் டன்!
பருவமழை தொடக்கத்தில் ஏற்படுத்திய அச்சம் இன்றில்லை. அதிக மழை இல்லை என்பது உண்மையாக இருப்பினும், பரவலாகப் பெய்யத் தவறவில்லை. மழையின்மை, அல்லது அணையில் நீர் இல்லை என்பதால் நெல்சாகுபடி பாதிக்கப்பட்டாலும்கூட, நிச்சயமாக 100 மில்லியன் டன் அரிசி உற்பத்தி நிச்சயம். கையிருப்பு 33 மில்லியன் டன். ஆக, இந்த ஆண்டு இந்திய மக்களுக்கு 133 மில்லியன் டன் அரிசி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்திய மக்கள் பயன்படுத்தும் அரிசி அளவு 95 மில்லியன் டன் மட்டுமே. அப்படி இருக்கும்போது, அரிசிவிலை கடந்த 3 மாதங்களில் கடுமையாக உயர்ந்துகொண்டே போவது ஏன் என்பதுதான் புரியவில்லை.
மொத்தக் கொள்முதலில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்புவரை ஒரு மூட்டை பொன்னி அரிசி (75 கிலோ) ரூ.2,100 ஆக இருந்தது. தற்போது இதன் விலை ரூ.500 கூடியிருக்கிறது. அதாவது ரூ.2,600. இந்த அரிசி 25 கிலோ சிப்பமாகக் கடைகளுக்கு வரும்போது அதன் விலை ரூ.1,000-க்கும் அதிகமாக உள்ளது.
இதேபோன்று, மோட்டா ரகம் அல்லது இட்லி அரிசி விலை கடந்த 6 ஆண்டுகளாக அதிக வித்தியாசம் இல்லாமல் ஒரே அளவாக இருந்தது. அதாவது, மொத்தக் கொள்முதலில் இட்லி அரிசி விலை ஒரு மூட்டைக்கு (75 கிலோ) ரூ,1,200 முதல் ரூ. 1,350 ஆக இருந்தது. ஆனால், கடந்த 3 மாதங்களில் ஒரு மூட்டைக்கு ரூ.800 வரை விலை உயர்ந்துள்ளது.
கடந்த 6 ஆண்டுகளில் இல்லாத விலையேற்றம் இட்லி அரிசிக்கு இப்போது ஏன் நேர்ந்தது? இந்தக் கேள்விக்கு அரிசி மொத்த விற்பனையாளர்கள் சொல்லும் பதில் ஆச்சரியத்தைத் தருகிறது: ரேஷன் அரிசி கடத்தல் தடுப்பில் தமிழக அரசின் கண்காணிப்பு அதிகமாகிவிட்டது. கெடுபிடி அதிகமாக இருக்கிறது. அதனால்தான் இட்லி அரிசி விலை அதிகரித்துவிட்டது.
இவர்கள் சொல்வதைப் பார்த்தால், ரேஷன் அரிசி பெரும்பாலும் பாலிஷ் போட்டு உள்ளூர் சந்தைக்கே திரும்பி வந்ததாகவும், அதனால் விலை உயராமல் இருந்தது என்பதாகவும் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், இந்த வாதமும் ஏற்புடையதாகவே இல்லை.
தமிழக அரசு 20 கிலோ ரேஷன் அரிசியை விநியோகித்தாலும் அதைப் பெறும் குடும்பங்கள் 50 விழுக்காடு மட்டுமாகவே இருக்கும். இவர்களும்கூட, ரேஷன் அரிசி பாதி, இட்லி அரிசி பாதி என்ற அளவில் ஊற வைத்து, மாவு அரைத்துப் பயன்படுத்துகிறார்கள். ஆக, இவர்கள் சொல்லும் கடத்தல் தடுப்பு கெடுபிடி எல்லாம் வெறும் கண்துடைப்பு வாதங்கள்.

தமிழ்நாட்டில் இன்றைய தேதியில் தள்ளுவண்டிக் கடைகளில் ஒரு இட்லி ரூ.2.50 அல்லது ரூ. 3-க்கு விற்பனை செய்ய இயலுகிறது என்றால் அதற்கு ஒரே காரணம் ரேஷன் அரிசிதான். தமிழக அரசு தரும் இலவச அரிசிதான் தள்ளுவண்டி இட்லி விலை உயர்வைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது. சர்வதேசச் சந்தையில், தாய்லாந்து, வியட்நாம், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள்தான் அரிசி ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கின்றன. இதில் இந்தியாவைப் பொருத்தவரை பாசுமதி அரிசிதான் முக்கியப் பங்கு வகித்தது. கடந்த சில ஆண்டுகளாக சாதாரண பொன்னி ரக அரிசி ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது. 2011-12 நிதியாண்டில் 7 மில்லியன் டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் 4.5 மில்லியன் டன் பாசுமதி அல்லாத ரகம்! தாய்லாந்து அரிசி (பாசுமதி அல்லாத ரகம்) விலையைக் காட்டிலும் 100 டாலர் குறைவாக விற்கவும் இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் தயாராக இருப்பதால், சர்வதேச அரிசிச் சந்தையில் இந்தியா இந்த ஆண்டு கூடுதலாக 2 மில்லியன் டன் அரிசி விற்பனை செய்ய வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிகிறது.

ஒருவேளை, ஏற்றுமதிக்குத் திருப்பிவிடப்படுவதால் விலை உயர்கிறதா அல்லது பருவமழை பொய்க்கும் என்ற பீதியைப் பயன்படுத்திக்கொண்டு விலையை உயர்த்துகிறார்களா என்பது தெரியவில்லை. போதுமான அரிசி இருப்பில் இருக்கும்போது, தட்டுப்பாடு இல்லாத நிலையில் ஏன் இந்த அளவுக்கு விலை உயர வேண்டும்?

ஒன்றுமட்டும் புரிகிறது. இந்த அரிசி விலை உயர்வு எல்லா குடும்பங்களையும் பீதியில் ஆழ்த்தியுள்ளது. இன்னும் விலை அதிகரிக்கும் என்ற பீதியில், கூடுதலாக ஒரு சிப்பம் சேர்த்து வாங்கி, சந்தையில் தேவையில்லாத விலை உயர்வுக்குத் தாங்களே ஒரு காரணமாகி விடுகிறார்கள்.

தற்போது நெல் கொள்முதல் விலை குவிண்டால் ரூ.1,250 என மத்திய அரசு உயர்த்தி இருக்கிறது. இந்தக் கொள்முதல் விலை முந்தைய ஆதார விலையைக் காட்டிலும் 16% அதிகம். புதிய கொள்முதல் விலைக்கே நெல் வாங்கி, அரைத்து அரிசியாக விற்பனைக்குக் கொண்டுவருகிறார்கள் என்றே வைத்துக்கொண்டாலும், 75 கிலோ நெல் விலை ரூ.940 மட்டுமே. இந்த நெல்லை வேக வைத்து, அரைத்து, அரிசி ஆக்குவது மற்றும் ஏற்றுக்கூலி இறக்குக்கூலி உள்பட ஒரு மூட்டைக்கு ரூ.225 வரை செலவிடுகிறார்கள். அதாவது ஒரு 75 கிலோ நெல், அரிசியாக மதிப்பூட்டப்படும்போது அதன் விலை தோராயமாக ரூ.1,200 ஆகத்தான் இருக்கிறது. ஆனால், சந்தையில் இது 100% அதிக லாபத்துக்கு விற்பனையாகிறது. உழுது விதைத்து அறுத்தவனுக்குக் கிடைத்தாலும்கூட, இந்த விலை உயர்வை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், நிலைமை அதுவாக இல்லையே. இடைத்தரகர்களும், மொத்த வியாபாரிகளும் அல்லவா கொழிக்கிறார்கள்.

அரிசி, வாழ்வின் இன்றியமையா உணவு தானியம். இதன் விலை கடந்த 3 மாதங்களில் அதிகரித்துள்ளது. அரசு என்ன செய்யப்போகிறது?

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**இறால், மீன் பண்ணைக்கு எதிர்ப்பு வட்டாட்சியர் அலுவலகம் முற்றுகை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2012,01:02 IST

கருத்தை பதிவு செய்ய

கும்மிடிப்பூண்டி : இறால், மீன் பண்ணை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து அளிக்கப்பட்ட மனுவிற்கு நடவடிக்கை இல்லாததால், வட்டாட்சியர் அலுவலகத்தை கிராம மக்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி பகுதிகளில் அமைக்கப் பட்டு உள்ள, இறால் மற்றும் மீன் பண்ணைகளால், நிலத்தடி நீரில் மாசு ஏற்பட்டு, குடிநீர் மற்றும் விவசாயம் பாதித்து மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் கும்மிடிப்பூண்டி அருகே, மேலகழனி ஊராட்சிக்கு உட்பட்ட ராக்கம்பாளையம் கிராமத்தில் தனியார் ஒருவர், தனது நிலத்தில் இறால் மற்றும் மீன் பண்ணை அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.அதை தடுத்த நிறுத்த கோரி, கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில், ராக்கம்பாளையம் கிராம மக்கள் சார்பில் மனு கொடுக்கப்பட்டது. எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் பொறுமை இழந்த ராக்கம்பாளையம் கிராம மக்கள் நேற்று, கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். விவசாய தொழிலாளர்கள் சங்க மாநில பொது செயலர் மணி தலைமையில், 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் முற்றுகை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கொடுத்த மனுவிற்கு உடனடி நடவடிக்கை எடுப்பதாக வட்டாட்சியர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

**விற்பனை படிவம் பெறாத உரத்துக்கு தடை விதிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2012,05:28 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "நாமகிரிப்பேட்டை யூனியனில், விற்பனை படிவம் பெறாத, 4,400 கிலோ உரம் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது' என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:நாமகிரிப்பேட்டை யூனியனுக்கு

உட்படட ஒரு சில தனியார் உர மையங்களில், சிறப்பு குழுவின் மூலம் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது, விற்பனை படிவம் பெறாத, 4,400 கிலோ உரங்களுக்கு தடை விதிக்கப்பட்டது.மேலும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் ரசீதுகளில், விவசாயிகளின் முழு முகவரியிட்டு வழங்கவும், உரங்களின் விற்பனை விலை அடங்கிய போர்டுகளை தெளிவாக எழுதி விவசாயிகளின் பார்வைக்கு வைக்கவும் அறிவுரை வழங்கப்பட்டது.

மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச சில்லரை விலைக்கு மேல் விற்பனை செய்யப்படும் உர விற்பனையாளர்கள் மீது உரக் கட்டுப்பாடு சட்டத்தின் மூலம் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சிறப்பு குழுக்கள் மூலம் அனைத்து யூனியன்களிலும் திடீர் ஆய்வு செய்யப்பட உள்ளது.உரக்கட்டுப்பாடு சட்டம் நடைமுறை விதிகளை மீறி உர விற்பனை செய்யும் தனியார் விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், விவசாயிகள் தாங்கள் பெறும் ரசாயண உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளுக்கு ரசீது பெற்றுச் செல்ல வேண்டும்இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தென்னையில் கருந்தலை புழு தாக்குதல் தடுப்பு முறைகளை கையாள அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2012,05:20 IST

கருத்தை பதிவு செய்ய

ராசிபுரம்: "தென்னையில், கருந்தலை புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால், அவற்றை கட்டுப்படுத்த தடுப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்' என, நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாத பிரகாசம் தெரிவித்துள்ளார்.வர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், ராஜாபாளையம், ஒண்டிக்கடை, நாரைக்கிணறு பிரிவு சாலை உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தென்னை மரங்களில், கருந்தலைப் புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. கருந்தலைப்புழுக்கள், இலைகளின் அடிப்பரப்பில் தனது கழிவுகளையும், கைகளையும் கொண்டு நூலாம் படையினைப் பின்னிக்கொண்டு, அதனுள் இருந்து கொண்டே, பச்சயத்தை சுரண்டி உண்ணும்.சேதநிலை அதிகமானால், தென்னை ஓலைகள் தீய்ந்து கருகிவிடும். தூரத்தில் இருந்து மரத்தைப் பார்த்தால், இலைகள் எரிந்து கருகியது போல் தோற்றமளிக்கும். அதனால், தென்னை மரங்களில் ஒளிச்சேர்க்கை குறைந்து, மகசூல் குறைந்து விடும். கருந்தலைப் புழுவின் பெண் அந்துப்பூச்சிகள் சாம்பல் நிறமுடையது.இது, 130 முட்டைகள் வரை, குவியல் குவியலாக இலைகளில் இடுகின்றது. புழுக்கள் பச்சையம் கலந்த பழுப்பு நிறத்தில் கறுப்பு நிறத் தலையுடன் இருக்கும். அவற்றை கட்டுப்படுத்த முதலில் சேதப்பட்ட இலைகளை அப்புறப்படுத்த வேண்டும். ஆரம்ப நிலையில் கருந்தலைப்புழுவின் இயற்கை எதிரியான ஒட்டுண்ணிகளை விடவேண்டும்.

புழு ஒட்டுண்ணிகளை கருந்தலைபுழுவின் இரண்டு மற்றும் மூன்றாம் புழு வளர்ச்சிப் பருவத்திலும், கூட்டுப்புழு ஒட்டுண்ணியை, கூட்டுப்புழு ஆரம்ப நிலையிலும் வெளியிட வேண்டும்.

ஒட்டுண்ணிகளை இலைப்பகுதியில் மட்டுமே விடவேண்டும். ஒட்டுண்ணியை விட்ட மூன்று வாரத்துக்கு பின்னரே, பூச்சிக்கொல்லியை பயன்படுத்த வேண்டும்.

தாக்குதல் அதிகமாக இருக்கும் போது, ஒரு லிட்டர் தண்ணீருக்கு டைகுளோரவாஸ், 76 டபிள்யு.எஸ்.இ., இரண்டு மி.லி., அல்லது மாலத்தியான், 50 இ.சி., ஐந்து மி.லி., மருந்தை ஒரு மி.லி., ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும். அதிக தாக்குதல் பரவி இருக்கும் போது, தாக்கப்பட்ட மரங்களின் நன்கு வளர்ந்த சிவப்பு நிறமுள்ள வேரினை சாய்வாக வெட்டிய பின், துளைகள் இல்லாத பாலித்தின் பையில் மோனோ குரோட்டாபாஸ், 36 எஸ்.எல்., பத்து மி.லி.,யுடன் பத்து மி.லி., தண்ணீர் கலந்து வேரினை அதில் வைத்து நன்றாக கட்டிவிட வேண்டும்.

பின்னர், 24 மணி நேரம் கழித்து, வேர் மருந்தினை உறிஞ்சி உள்ளதா என கண்டறிய வேண்டும். இல்லையெனில், வேறு வேரினை தெரிவு செய்து, மேற்கொண்ட முறையை பின்பற்றி, பூச்சியின் தாக்கத்தைக் குறைக்கலாம். அவ்வாறு செய்யும் போது, 45 நாட்களுக்கு பின் காய்களை அறுவடை செய்ய வேண்டும். இத்தகைய தடுப்பு முறைகளை விவசாயிகள் பயன்படுத்தி, கருந்தலைப்புழுவை கட்டுப்படுத்தலாம்.

**மானிய விலை உரங்களை தொழிற்சாலைக்கு பயன்படுத்த தடை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2012,04:54 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: "மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரங்களை தொழிற்சாலைக்கு பயன்படுத்தினால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என கலெக்டர் லில்லி எச்சரித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில் விவசாய பயன்பாட்டுக்கு என மத்திய அரசு ரசாயன உரங்கள் மானியமாக வழங்குகிறது. நேரடி விவசாய உபயோகத்துக்கு மட்டுமின்றி, தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட கலவை உரங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் மட்டும் மானிய உரங்களை மூல பொருட்களாக பயன்படுத்தலாம்.இது தவிர மற்ற உபயோகத்துக்து மானியத்துக்கு வழங்கப்படும் உரங்களை பயன்படுத்துவது உரக்கட்டுப்பாடு ஆணை 1985 பிரிவு 125ன் படி சட்டத்துக்கு மீறிய செயலாகும். மானியத்தில் வழங்கப்படும் யூரியாவை மூலப்பொருட்களாக பேப்பர் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், சர்க்கரை ஆலைகள், பி.வி.சி., பைப்புகள், கதகள், தயாரிக்கும் நிறுவனங்கள், ஸ்டீல் நிறுவனங்கள், மாட்டு தீவனம் தயாரிக்கும் நிறுவனங்கள், கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையங்களில் பயன்படுத்துவதாக மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளது.

தொழிற்சாலை உபயோகத்துக்கு என உரங்களை பயன்படுத்துவோர் டெக்னிக்கல் கிரோடு

யூரியாவினை வாங்கி பயன்படுத்தி கொள்ளலாம். இதர மானிய உரங்களான டி.ஏ.பி., பொட்டாஷ் போன்ற உரங்கள் தொழிற்சாலை ஏஜன்ட்களிடம் இருந்து முழு விலையில், வாங்கி பயன்படுத்தலாம்.

மாநில அரசு உரங்களுக்கு நான்கு சதவீத மதிப்பு கூட்டு வரியில் இருந்து விலக்கு அளித்துள்ளது. தென் மாநிலலங்களில் தமிழகத்தில் உரங்களின் விலை குறைவாக இருப்பதால், பிற மாநிலங்களுக்கு கடத்துவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

வேளாண் ஆணையகரத்தின் உரிமம் பெற்ற உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மட்டுமே தமிழகத்தில் இருந்து இதர மாநிலங்களுக்கு மத்திய அரசின் வழிகாட்டுதல்படி மாறுதல் செய்ய இயலும். நமது மாநிலத்தில் ஒதுக்கீடு செய்த அளவினை மற்ற மாநிலங்களுக்கு மாறுதல் செய்ய கூடாது.

சட்டத்துக்கு புறம்பாக அண்டை மாநிலங்களுக்கு கடத்தல் மற்றும் தொழிற்சாலை உபயோகத்துக்கான உரங்களை பயன்படுத்தினால், அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1995ன் படி ஏழு ஆண்டுகள் வரை சிறை தண்டனை அபராதமும் விதிக்கப்படும்.

**கால்நடை மருத்துவ முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2012,05:55 IST

கருத்தை பதிவு செய்ய

ஓசூர்: ஓசூர் அடுத்த பூனப்பள்ளியில், கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கால்நடைபாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது.பஞ்சாயத்து தலைவர் விவேக்ஆனந்த் தலைமை வகித்தார். துணைத்தலைவர் கோபால்ரெட்டி மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் டாக்டர் ராஜசேகர் மேற்பார்வையில் கால்நடை உதவி மருத்துவர்கள் சீதாலட்சுமி, தீபா மற்றும் மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் அழைத்து வந்த கால்நடைகளுக்கு தடுப்பூசி, குடல்புழு நீக்கம், சினை பரிசோதனை, மலடு நீக்கம் ஆகிய சிகிச்சைகளை மேற்கொண்டனர்.முகாமில், சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த விவசாயிகள், 400க்கும் மேற்பட்ட தங்களுடைய கால்நடைகளை அழைத்து வந்து சிகிச்சைக்கு கொண்டு வந்தனர். விவசாயிகளுக்கு கால்நடைகளுக்கு தேவையான தீவன புல் வளர்ப்பு பணி குறித்து அறிவுரை வழங்கினர்.முகாமுக்கு வந்த நல்ல திடகாத்திரமான இரு பசுகளை தேர்வு செய்து அவற்றின் உரிமையாளர்களுக்கு சிறப்பு பரிசுகளை கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் ராஜேசேகர், பஞ்சாயத்து தலைவர் விவேக் ஆனந்த் ஆகியோர் வழங்கினர். ஏற்பாடுகளை பூனப்பள்ளி பஞ்சாயத்து செயலாளர் சுபாஷினி செய்திருந்தார்.

**துவரை சாகுபடிக்கு ரூ.72 லட்சம் ஒதுக்கீடு; கரூர் கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2012,06:22 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: "கரூர் மாவட்டத்தில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக 2012-13 ம் ஆண்டுக்கு 72.175 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு öய்யப்பட்டுள்ளது' என கரூர் மாவட்ட கலெக்டர் ÷ஷாபனா தெரிவித்தார்.கரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு 16, ஆயிரத்து 490 ஹெக்டரில் பயறு வகை பயிர் சாகுபடி செய்து 11, ஆயிரத்து 93 மெட்ரிக் டன் பயறு உற்பத்தி செய்யப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.துவரைப் பயிரில் அதிக வாய்ப்புள்ளது என்பதால் 114 ஹெக்டருக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் மற்றும் இறவை யில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கிட தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் கீழ் 17.10 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய ப்பட்டுள்ளது.நடவு முறையில் துவரை சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு 601 ஹெக்டருக்கு 7,500 ரூபாய் வீதம் ஊக்கத்தொகையாக 50 சதவீதம் மானியத்தில், அறுவடை முடிந்தபின் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் கீழ் மானியமாக 45.075 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் பயறுவகை திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானியமாக துவரை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு 5,000 ரூபாய் வீதம் 200 ஹெக்டருக்கு மானியமாக 10.00 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுஎனவே, இறவையில் துவரை சாகுபடி செய்யும் அனைத்து தரப்பு விவசாயிகள், வட்டார வேளாண் உதவி இயக்குனர்களை தொடர்பு கொண்டு, மானியம் பெற்று மகசூல் பெருக்கி அதிக லாபம் பெற்று பயனடையலாம்.

**பசுமை வீடுகள் கட்டும் பணி திட்ட இயக்குநர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2012,00:53 IST

கருத்தை பதிவு செய்ய

தேவதானப்பட்டி: பசுமை வீடுகள் கட்டும் பணியை,மாவட்ட திட்ட இயக்குனர் தர்மசிவம் நேரில் ஆய்வு செய்தார்.பெரியகுளம் ஒன்றியம், ஜி.கல்லுப்பட்டியில் பசுமைவீடுகள் கட்டும் பணி நடந்து வருகிறது. அங்கு எம்.எல்.ஏ., நிதியில், நடந்து வரும் சிமென்ட் சாலை மற்றும் மூப்பர் தெருவில் புதிய கழிவு நீர் வாய்க்கால் கட்டுவதற்கான இடத்தை திட்ட இயக்குநர் தர்மசிவம் ஆய்வு செய்தார். உதவி செயற்பொறியாளர் ஜோதி, பி.டி.ஒ.,க் கள் கண்ணாம்பாள், ராஜராஜன், உதவி பொறியாளர்கள் நாகராஜன், சோனா, தலைவர் வளையாபதி, ஒன்றியக்கவுன்சிலர் சுப்பிரமணி,

வார்டு உறுப்பினர்கள் செந்தில், பாண்டி, ஊராட்சி செயலாளர் பாண்டியராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

தினகரன்

வாழையில் இருந்து பட்டு தயாரிக்கும் இயந்திரம் தூத்துக்குடி இன்ஜினியர் கண்டுபிடிப்புக்கு

காப்புரிமை இந்திய அறிவுசார் சொத்து நிறுவனம் நடவடிக்கை

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-08-01 11:04:40

தூத்துக்குடி,: தூத்துக்குடி இன்ஜினியர் முருகன் கண்டுபிடித்த வாழை மரத்திலிருந்து பட்டுநூல் தயாரிக்கும் இயந்திரத்திற்கு இந்திய அறிவுசார் சொத்து நிறுவனம் காப்புரி மை வழங்கியுள்ளது. தூத்துக்குடி பிரை யண்ட் நகரை சேர்ந்தவர் இன்ஜினியர் முருகன்.

இவர் கடந்த 2005ம் ஆண்டு வாழை மரத்திலிருந்து பட்டுநூலினை பிரித்தெடுக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்தார். இதனை இந்திய அறிவியல் தொழில்நுட்ப கழகம் ஆய்வு செய்து ஏற்றுக்கொண்டது. பின்னர் 2006ம் ஆண்டு முருகன் தனது கண்டுபிடிப்பை இந்திய அறிவுசார் சொத்து நிறுவனத்திற்கு அனுப்பி காப்புரிமை கோரினார். கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு நாடுகளிலும் இதுபோன்ற தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா என்பதை இந்திய அறிவுசார் சொத்து நிறுவனம் ஆராய்ந்து தற்போது முருகன் கண்டுபிடித்த இயந்திரத்திற்கு காப்புரிமை வழங்கியுள்ளது.

காப்புரிமை சட்டப்படி  கண்டுபிடிப்பாளரின் அனுமதிபெற்று அவருக்குரிய தொகையை செலுத்திய பின்னரே இந்த பொருளை மற்றவர்கள் உற்பத்தி செய்ய இயலும். 20 ஆண்டுகளுக்கு இந்த கண்டுபிடிப்பு, கண்டுபிடிப்பாளருக்கு சொந்தமாகும். அதன்பின்னர் இந்த தொழில்நுட்பம் நாட் டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

இதுகுறித்து இன்ஜினியர் முருகன் கூறுகையில், ‘இக்கண்டுப்பிடிப்பினை அமல்படுத்துவதற்கு, உலக அரங்கில் பல்வேறு நாடுகள் விருப்பம் தெருவித்துள்ளன. எகிப்து நாட்டில் நைல் நதிக்கரையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் வாழை பயிரிடப்படுகிறது.

எனவே இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்த அந்நாட்டு நிறுவனம் விருப்பம் தெருவித்துள்ளது.

அதேபோல் பிரான்ஸ், லண்டன், வேல்ஸ், கென்யா, மெக்சிகோ நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.
வாழையில் இருந்து பட்டு நூல் தயாரிக்கும் இயந்திரம் கண்டுபிடிப்பு உலக அளவில் அனைத்து துறைசார்ந்த நிறுவனங்களின் பாராட்டைப் பெற்றுள்ளதோடு உலக வங்கியும் எனக்கு பயிற்சியளித்து ஊக்கப்படுத்தியது.
அமெரிக்காவின் டெக்ஸாஸ் பல்கலைக்கழகம் எனது கண்டு பிடிப்பை சிறப்பாக செய்வதற்கு ஆன்லைன் மூலம் பயிற்சி அளித்து சிறப்பு சான்றும் வழங்கியுள்ளது' என்றார்.

வாழைப்பழம் விலை சிதம்பரத்தில் கிடுகிடு தார் ரூ700க்கு விற்பனை

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-08-01 11:20:39

சிதம்பரம், : சிதம்பரம் மற்றும் சுற்றுபுற பகுதிகளில் வாழைப்பழம் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஆடி மாதம் என்பதால் அனைத்து மாரியம்மன் கோயில்களிலும் ஆடி மாத திருவிழா நடந்து வருகிறது. இக்கோயில்களில் படைப்பதற்காக வாழைப்பழம் வாங்க சென்ற மக்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ரூ.1 முதல் 2 வரை விற்றுவந்த பூவன் வாழை பழம் ஒன்று ரூ.5 முதல் 6 வரை விற்கப்படுகிறது. 200 பழம் கொண்ட தார் ஒன்று ரூ.650 முதல் 700 வரை விற்கப்படுகிறது.
ஏன் இந்த திடீர் விலை உயர்வு என விசாரித்ததில் வாழை உற்பத்தி குறைவாக உள்ளது என்றும், தானே புயலில் கடலூர் மாவட்டத்தில் பெரும்பான்மையான வாழை மரங்கள் அழிந்துவிட்டதால் வெளி மாவட்டங்களிலிருந்து வாழைப்ப ழங்கள் வரவழைக்கப் படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பருவ மழை பொய்த்தது வறண்ட ஏரி, குளம் தூர்வார விவசாயிகள் வலியுறுத்தல்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-08-02 09:58:06

கோபி, : ஈரோடு மாவட்டத்தில் ஏரி மற்றும் குளங்களை தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும், மண் எடுக்க தனியாருக்கு அனுமதிக்காமல் விவசாயிகளுக்கே வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.
ஈரோடு மாவட்டத்தில் கோபி கோட்டத்திற்கு உட்பட்ட கோபி, சத்தியமங்கலம், பவானி, அந்தியூர்

ஆகிய பகுதிகளில் 100க்கு மேற்பட்ட ஏரிகள் குளங்கள் உள்ளன. பெரும்பாலான குளங்கள் 500 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்டவை. இதனால் இந்த பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் நல்ல நிலையில் இருந்து வந்தது. கடந்த சில ஆண்டுகளாக அதிகளவு பருவமழை பெய்ததால் குளங்கள் மற்றும் குண்டேரி பள்ளம், பெரும்பள்ளம், வறட்டுப் பள்ளம் ஆகிய அணைகள் நிரம்பியிருந்தன.

ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக போதிய அளவு பருவமழை இல்லாததால் தற்போது பெரும்பாலான ஏரி மற்றும் குளங்களில் 10 சதவீத தண்ணீரே இருப்பு உள்ளது. இதனால் குளங்கள் ஏரிகள் மற்றும் அணைகளை தூர் வார இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

இது குறித்து கொடிவேரி அணை பாசனதாரர் சங்க துணை தலைவர் தளபதி கூறுகையில், கோபி கோட்டத்தில் மட்டும் குண்டேரி பள்ளம், பெரும்பள்ளம், சஞ்சீவராயன் ஏரி, ஓடத்துறை ஏரி, தண்ணீர் பந்தல் ஏரி, வேம்பட்டி ஏரி உள்ளிட்ட 50க்கு மேற்பட்ட பெரிய அளவிலான ஏரிகளும் 100க்கு மேற்பட்ட சிறிய குளங்கள் மற்றும் தடுப்பணைகள் பொதுப் பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளன.

பெரும்பாலான ஏரி குளங்களில் 30 ஆண்டுகளாக தண்ணீர் இருந்ததால் ஏரிகளில் வண்டல் மண் அதிகரித்து அதன் கொள்ள ளவு குறைந்துள்ளது. தற்போ து 98 சதவீத ஏரிகளில் நீர் குறைந்துள்ளதால் இந்த ஏரி குளங்களில் தூர் வாரவும் ஆழப்படுத்தவும் கரைகளைப் பலப்படுத்தி அதன் கொள்ள ளவை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1969 தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் சட்டப்படி பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள நீர் நிலைகளில் அந்தந்த பகுதிகளில் உள்ள விவசாயிகள் 1 மீ ஆழத்திற்கு விவசாய பயன்பாட்டிற்கு மண் எடுக்கலாம் என அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் தற்போது பெரும்பாலான இடங்களில் மாவட்ட நிர்வாகம் தனியார் ஒருவருக்கு வண்டல் மண் எடுக்கும் உரிமையை வழங்கியுள்ளது.

ஆனால் மண் எடுக்கும் தனி நபர்கள் அதனை செங்கல் சூளை உள்ளிட்ட வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வருகின்றனர். தனி நபர் பல லட்சம் வருவாய்  ஈட்ட மாவட்ட நிர்வாகமே மறைமுகமாக ஆதரவளிக்கிறது.

குளத்திலோ அல்லது ஏரியிலோ வண்டல் மண் எடுக்கும் விவசாயிகள் அந்த குளத்தின் மூலம் பயனடையும் விவசாயி ஆக இருக்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலர் அனுமதி பெற வேண்டும். சிட்ட அடங்கல் வைத்திருக்க வேண்டும் என்ற விதிகள் மீறப்பட்டு தனிநபர் ஒருவரே ஆதாயம் பார்க்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதை மாவட்ட நிர்வாகம் உடனடியாக தடுத்து, விவசாயிகள் பயனடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதே போல் அத்தாணி, செம்புலுச்சாம்பாளையம் பகுதியில் உள்ள தண்ணீர் பந்தல் ஏரி சுமார் 450 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. இந்த ஏரிக்கு செல்லும் பாதை வனத்துறை கட்டுப்பாட்டில்

இருப்பதால் அந்த ஏரியில் வண்டல் மண் எடுக்கப்படவில்லை. இதனால் ஏரி முழுவதும் மண் நிறைந்து மேடாக காட்சியளிக்கிறது. இதனால் மழைக் காலத்தில் தண்ணீர் தேங்காமல் வழிந்தோடி விடுவதால் வனவிலங்குகள் குடியிருப்புகளில் புகும் அபாயம் உள்ளது.

இதனால் மாவட்ட நிர்வாகம் பொதுப்பணித் துறை மற்றும் வனத்துறை அதிகாரிகளுடன் கலந்து இது போன்ற வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்க ளை தூர் வார நடவடிக்கை